

காரைக்குடியில் நடைபெற்ற சிவகங்கை மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளரும்,கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் பேசினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட அவைத்தலைவர் அ.கணேசன்,மாவட்ட துணை செயலாளர் கள் த.சேங்கைமாறன்,கே.எஸ்.எம்.மணிமுத்து உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

சமூக நீதி - சமதர்மத்திற்கு முதலிடம் தருகிற

# திராவிட ஆட்சி இந்திய தேசத்தில் மலர்ந்தாக வேண்டும்!

என் இனிய தமிழ்ச் சொந்தங்களே......! நமக்கான உணவு தட்டிலோ இலையிலோ பரிமாறப்பட்டு நம் முன்னாலே வைக்கப்பட்டு விட்டால் நமது பசி ஆறிவிடுமா? ஆறாது! நமது மனம் ஆசைப்பட்டாலும் ஆறாது! நமது கையில் உள்ள ஐந்து விரல்களும் ஒன்றிணைந்து முன்னால் இருக்கும் உணவை அளவோடு பகிர்ந்து எடுத்து பிசைந்து வாயில் வைக்க வேண்டும் ஊறிவரும் எச்சிலோடு இணைத்து பற்கள் துணை கொண்டு அரைத்து பதமாக்கி பின்னர் நாக்கின் துணையோடு தகுந்த அளவில் உள்ளே தள்ள வேண்டும்! பரிமாறப்பட்ட உணவு வாய்க்கு செல்வதற்கும் வாய்க்குள்ள இருந்து வயிற்றுக்கு செல்வதற்குமே என்னென்ன செய்ய வேண்டி இருக்கிறது? இந்த செயல்பாட்டினை தமிழக மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்!

நமது மாநில முதல்வர் இந்திய தேசத்துக்கான மாற்று அரசியலை தைரியமாக பிரகடனப்படுத்தியுள்ளார்! நமது மாநில மக்கள் தொகை எட்டு கோடி- இந்திய தேச மக்கள் தொகை 141கோடி! எண்ணிக்கை பெரிதென்று நாம் அஞ்ச வேண்டிய கவலையே இல்லை! தேசம் பாதுகாக்கப்பட வேண்டும். ஜனநாயகம் தழைக்க வேண்டும். ஒன்றிய அரசியலில் மாற்றம் வேண்டும்! இதுவே நமது முதல்வரின் எண்ணம்!

தட்டில் உள்ள உணவு வாய்க்குள் போவதற்கு ஐந்து விரல்களும் ஒன்றிணைந்து உதவுவது போல எட்டு கோடி தமிழக மக்களும் கட்சிகளை, தலைவர்களை மறந்து சன்மார்க்க அரசியலை வீழ்த்த திராவிட அரசியலை தாங்கிப் பிடிக்கும் பணியினை செய்திடல் வேண்டும்! நமது முதல்வரின் பின்னால் அனைவரும் ஓர் அணியாக அணிவகுப்பது தற்போது அவசியமாகிறது! முதலில் தேசம் மீட்போம்.மாநிலத்தை வளர்ப்போம்! நாடு நன்றாக இருந்தால் மட்டுமே மக்கள் சுபிட்சமாகவும் மகிழ்வோடும் வாழ முடியும்!

ஒன்றிய பா.ஜ.க. அரசை நம்பி இனியும் நாம் ஏமாந்தால் இந்தியா ஒற்றை மதம் ஒரே கட்சியின் நிரந்தர சன்மார்க்க சர்வாதிகார ஆட்சி என்ற நிலை வருவது உறுதியாகிவிடும்! இதனைத் தடுத்து நிறுத்தி 26 நவம்பர் 1949 இல் இயற்றப்பட்டு 26 ஜனவரி 1950 இல் அமல்படுத்தப்பட்ட இந்திய அரசியல் சாசனப்படி மாநிலங்களின் இணைந்த யூனியன் ஆக மாநிலங்களின் தன்னாட்சி பாதிக்கப்படாமல் ஒன்றிய அரசின் ஜனநாயக ஆட்சி நடக்க வேண்டுமானால் சமூக நீதிக்கும் சமதர்மஆட்சிக்கும் முதலிடம் தருகின்ற தொன்மையான திராவிட ஆட்சி இந்திய ஒன்றியத்தில் மலர்ந்தாக வேண்டும்!



**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்

ஒரு மாநிலம் மதிக்கப்படுவது அதன் நிதி நிலை கண்டோ நதி வளம் கண்டோ அல்ல! அந்த தேச மக்களின் மனவளம் கொண்டு தான் மதிக்கப்படுகிறது என்று சொன்னவர் நமது பேரறிஞர் அண்ணா! வரலாறு படைத்த இனம் வந்தேறிகளின் வால் பிடிக்கும் இனமாக மாறிய போது தான் தமிழனின் மனவளம் பாதிக்கப்பட்டது! அறியாமை என்ற இருள் சூழ்ந்தது. உழைத்துக் களைத்து ஓய்வெடுத்து பழகிய இனம். உழைக்காமல் களைக்காமல். அரச மரத்தை சுற்றி வந்து அடிவயிற்றை தொட்டுப் பார்ப்பது. அட்சயதிருதியை அன்று தங்கம் வாங்கினால் அது பொங்கிப் பெருகும் என நம்பி காத்திருப்பது. அக்ரஹாரத்து ஆசி கிட்டினால் ஆட்சிக் கட்டிலிலும் ஆண்டவனின் அடியார் கூட்டத்திலும் இணைந்து வாழலாம் என்று நம்பி வாழ்ந்தது மனவளத்தை மட்டுமா கெடுத்தது? தமிழனின் வரலாற்றில் கறை படிந்தது!

மனிதன் சொல்ல கடவுள் எழுதியது திருவாசகம். கடவுள் சொல்ல மனிதர் எழுதியது திருப்புகழ்! மனிதன் தானாகவே எழுதியது திருமந்திரம்.....இவற்றை மீறிய கருத்து எதையுமே புதிதாகச் சொல்லித் தரவில்லை அக்ரஹாரத்து மேதாவிகள்! அப்படி இருந்தும் நமது மக்கள் அடிமைகளானது முதலில் அக்ரஹாரத்துக்கு. பின்னர் பிரிட்டிஷ்காரனுக்கு.

வெள்ளைக்காரனை அவன் கொள்ளைக்காரன் என்பதை புரிய வைத்து நாட்டை விட்டு அவனை விரட்ட ஒரு மகாத்மா தேவைப்பட்டார்! பஞ்சாங்கம்-தர்ப்பைப் புல்-பூணூல்-பில்லி சூனியம் என ஏமாற்றி வந்த கூட்டத்திடமிருந்து நமது மக்களை மீட்க தந்தை பெரியார் அவசியமானார்! தேசப்பிதா பயன்படுத்திய ஆயுதம் அகிம்சை.....பெரியார் பயன்படுத்திய ஆயுதம் பகுத்தறிவு! இரண்டையும் இணைத்து பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட அரசியல் இயக்கம் தான் தி.மு.க.!

இந்த இயக்கத்தை ஒழித்து விட அழித்துவிட வடக்கிலிருந்து வால் நட்சத்திரங்கள் பல கிளம்பின! அவற்றை பொசுக்கி விட்டு மத்திய மந்திரி சபையிலே தன் கட்சிப்பிரதிநிதிகளை அமைச்சர்களாக அமர வைத்து அழகு பார்த்தவர் அண்ணாவின் தம்பி கலைஞர் அவர்கள்! அகில இந்திய அரசியலுக்கு அவசியமான தலைவராக கருதப்பட்டவர் நமது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்!

இந்த அரசியல் ஆளுமையை-கொள்கை பெட்டகத்தை -ஒன்றிய அரசின் ஆட்சி மாற்றத்திற்கும், இந்திய பூர்வீக குடி மக்களின் வாழ்வின் விடியலுக்கும் பயன்பட வேண்டும் என்பதற்காக நமது இளம் சூரியன் முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் கையில் எடுத்திருக்கும் பிரம்மாஸ்திரமே திராவிட அரசியல்!

இந்த பிரம்மாஸ்திரத்தில் பேய் இல்லை-பிசாசு இல்லை-யாகம் இல்லை-ஓமம் இல்லை-மந்திரம் இல்லை- மாயம் இல்லை காவியும் இல்லை-கறுப்பில்லை சிவப்பில்லை- பஞ்சாங்கம் இல்லை.ஆசி வழங்க ஆச்சாரியார்கள் தேவையில்லை! ஆனால் ஏழையின் சிரிப்பில் இறைவனை காணலாம்! சமநீதி சட்டமாகி இந்த மண்ணின் பூர்வீக குடிமக்கள் நாடாளும் வாய்ப்பை பெறலாம்! சேரிகளையும் குடிசைகளையும் இதுவரை நெருங்காத சுதந்திர வெளிச்சம் அவர்கள் வீட்டு விளக்காக மாறி நிரந்தர ஒளி தரலாம்! தேசப்பிதா காந்திஜி கடலோரம் கையில் எடுத்த உப்பை கூட கார்ப்பரேட் கம்பெனியின் வியாபார பொருளாக மாற்றப்பட்டது! அது மீண்டும் தெருவோரத்தில் உள்ள கடைகளில் ஏழை எளியவரின் விற்பனை பொருளாக மாறுவது நிச்சயம்!

கட்டணம் வாங்காத கல்வி-வைதீகம் ஒதுக்கப்பட்டு பகுத்தறிவு பாடங்கள் பள்ளிகளில் நடத்தப்படும்! மேதினியில் இட்டார் பெரியோர்-இடாதார் இழி குலத்தோர் என்ற ஔவை பாட்டியின் ஜாதிய ஒழிப்பு முறை கடைப்பிடிக்கப்படும்! கள்ளப் பணங்கள் பறித்து எடுக்கப்படும்! கார்ப்பரேட்டுகளின் பங்கு பத்திரங்கள் பாகுபாடின்றி ஏழைகளுக்கும் வழங்கப்பட்டு அதில் ஆற்றல் மிக்கவர்கள் கம்பெனியின் மிக உயர் பதவிகளுக்கு வர வாய்ப்பு அளிக்கின்ற சட்டங்கள் இயற்றப்படும்! அறக்கட்டளைகளுக்குள் மறைந்திருக்கும் மன்னர் பரம்பரைகள் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்டு-பதுக்கப்பட்டுள்ள சொத்து சுகம் பணம் அனைத் தும் பொதுவுடைமையாக்கப்படும்!

தனி மனிதனின் வளர்ச்சி எவ்வளவு முக்கியமோ அதே அளவு முக்கியத்துவம் எல்லா மாநிலங்களுக்கும் வழங்கப்படும்! மாநிலங்களின் எந்த உரிமைகளிலும் ஒன்றிய அரசு தலையிடாது! இது போன்ற அற்புதமான பல கொள்கை கோட்பாடுகளை உள்ளடக்கி யதே நமது முதல்வர் கையில் எடுத்திருக்கும் திராவிட அரசியல்!

இதனை அடித்தட்டு இந்திய மக்கள் அனைவரும் புரிந்து கொள்ளுகின்ற வகையில் நாடு முழுவதும் பரப்புரை மேற்கொள்ள வேண்டும்.

சன்மார்க்க அரசியலில் ஊறி திளைத்துப் போன நமது பாரதவாசிகளுக்கு-திராவிட அரசியலில் ஜீவாதாரக் கொள்கைகளை விளக்கமாக எடுத்துச் சொல்லி சன்மார்க்க அரசியலுக்கு மாற்று அரசியல் திராவிட அரசியல் மட்டும்தான் என்பதனை புரிய வைக்க வேண்டும்!

இந்திய அரசியல் சாசனப்படி..மாநிலங்கள் இணைந்த இந்திய யூனியனாக......மாநிலங்களின் தன்னாட்சி பாதிக்கப்படாமல் ஒன்றிய அரசில் ஜனநாயக ஆட்சி நடக்க வேண்டுமானால்....சமூக நீதிக்கும்...சமதர்ம ஆட்சிக்கும் முதலிடம் தருகின்ற திராவிட ஆட்சி இந்திய தேசத்தில் மலர்ந்தாக வேண்டும்!

மக்களே சற்று சிந்தித்துப் பாருங்கள். சன்மார்க்க அரசியலில் அரசியல் சாசனம் வழங்கிய சலுகைகள் உங்களுக்கு வழங்கப்பட்டனவா?

ஆனால் தமிழ்நாட்டில் கடந்த 50 ஆண்டுகால திராவிட ஆட்சியில் இவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு இன்றும் அவை வெற்றி நடைபோடுகின்றது! எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்...இல்லாமை இல்லாத நிலை வேண்டும். இதனை செயல்படுத்துவதே திராவிட அரசியல் கொள்கையாகும்.அடுத்த 50 ஆண்டுகளுக்கு ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்துக்கு திராவிட அரசியல் தேவையானது!

இதுவரை ஏமாற்றப்பட்ட ஏழை இந்தியர்கள் அத்தனை பேரும் இதனை உணர்ந்து கொண்டு தங்களுக்கு கிடைத்த சுதந்திரத்தை சூழ்ச்சிகள் செய்து தடுத்து நிறுத்திய சன்மார்க்க அரசியல்வாதிகளை தூக்கி எறிந்து விட்டு - ஜனநாயக முறைப்படி அவர்களை தோற்கடித்து திராவிட அரசியலை வெற்றி பெறச் செய்து தங்கள் வாழ்வை வளம் பெறச் செய்வதோடு இந்திய அரசியல் சாசனப்படி ஆட்சி நடக்க திராவிட அரசியலுக்கு வாக்களித்து அரியணை ஏற்றிடல் வேண்டும்! அதுவே இந்திய ஒன்றியமும் மாநிலங்களும் மக்களும் உய்வதற்கான ஒரே வழி!

அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கிறார்!

# இராதாபுரத்தில் ரூ.605 கோடியில் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள்!

## சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு தகவல்

நெல்லை.மே 24-

நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்ற தொகுதியில் ரூபாய் 605 கோடியில் தாமிரபரணி கூட்டுகுடிநீர் திட்டம் அடிக்கல் நாட்டு விழா நிகழ்வு வருகிற 26.5.2023 அன்று நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே. என்.நேரு பங்கேற்று துவக்கி வைக்கிறார் என தமிழ்நாடு சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நெல்லை மாவட்டம் இராதாபுரம் தொகுதியில் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

அதன்படி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 605 கோடியில் இராதாபுரம் தொகுதியில் உள்ள 1 லட்சம் வீடுகளுக்கு நேரடியாக தாமிரபரணி கூட்டு குடிநீர் வழங்க உத்தரவிட்டார்கள்.ரூபாய் 605.75 கோடி மதிப்பில் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசிடம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் வருகிற 26.5.2023 அன்று இராதாபுரத்தில் குடிநீர் திட்டம் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா நிகழ்வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு. பங்கேற்று துவக்கி வைக்கிறார்.

இது தொடர்பாக இராதாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் வைத்து குடிநீர் திட்டப்பணிகள் அடிக்கல் நாட்டு விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக விழா நடைபெற உள்ள இடத்தை சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு ஆய்வு செய்தார்.

நிகழ்வில் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி,ஊராட்சி மன்ற தலைவர் பொன்.மீனாட்சி அரவிந்தன், சிதம்பராபுரம் பேபி முருகன், பெட்டைக்குளம் பொன்இசக்கி, சௌந்தரபாண்டியபுரம் முருகேசன், கவுன்சிலர் படையப்பா முருகன், சுப்பையா,குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்பு பொறியாளர் செந்தூர் பாண்டி, செயற் பொறியாளர்கணேஷ் குமார்,குடிநீர் திட்ட அதிகாரிகள் ராமலட்சுமி,கென்னடி,டேனிஸ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் கோடை வெப்பத்தை சமாளிக்க குடை!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்கினார்!

தூத்துக்குடி, மே 24-

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி சார்பில் கோடை கால குளிர் பதன பந்தல் தூத்துக்குடி நகரில் நடைபெற்றுவருகிறது.

வழக்கத்தை விட இந்த ஆண்டு கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும் நிலையில், பொதுமக்கள் வெயிலை சமாளிப்பதற்கும், அவர்களின் அன்றாடப் பயன்பாட்டிற்கு உதவிடும் வகையில் மடக்கு குடைகளை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சார்பாக முன்னாள் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் கஸ்தூரி தங்கம் மற்றும் கட்சி நிர்வாகிகள், பொது மக்களுக்கு வழங்கினர்.



இக்கடுமையான கோடை காலத்தில் மக்கள் அனைவரும் முடிந்த வரையில் வெளியே செல்வதைதவிர்த்து பாதுகாப்பாக இருக்குமாறும், வெளியே செல்கையில் குடைகளை எடுத்துச் செல்லுமாறும் கனிமொழி எம்.பி கேட்டுக் கொண்டார்.

# திருவொற்றியூரில் தெருமுனைக் கூட்டங்கள்!

சென்னை, மே 24-

திருவொற்றியூர் மேற்குப் பகுதியில் கழக அரசின் 2 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் மு.சிவகுமார், மு.மாணிக்கவேலன், ந.திருசங்கு தலைமையில் 20.5.2023 அன்று 1, 2,3 ஆகிய வட்டங்களில் நடைபெற்றது .

பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் முன்னிலை யில் நடைபெற்ற இக்கூட்டங்களில்

வட்ட செயலாளர்கள் மு. சிவகுமார், மு.மாணிக்கவேலன் ஆகியோர் தலைமையேற்று நடத்தினர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் திராவிட நாயகரின் அவர்களின் தலை மையிலான திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை கூட்டங்கள் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டங்களில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை தலைமை கழக பேச்சாளர் ஒசூர். அப்துல் ரகுமான் பாரி சிறப்பாக எடுத்துரைத்தார்.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ., கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., மாவட்ட பொருளாளர் எல்.ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் மற்றும் பொது மக்கள் பங்கேற்ற இக்கூட்ட த்தில் பேசிய சிறப்பு பேச்சா ளர் உள்ளிட்ட அனைவரும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விரிவாக எடுத்துக்கூறினர்.

இதில் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் என்.திருசங்கு, இ.குமரவேல், யு.எஸ். குறளரசன், ஏ.இந்துமதி, எம். வஜ்ரவேல்,

மாவட்ட பிரதிநிதிகள் சந்திரகுமார், பொன்.கோ. விஜயன், ந. ராம்குமார், ,ஜி. தினேஷ், ஆர் மோகன சுந்தரம், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி மாவட்டக் கழகக் கூட்டம்

## மாவட்டச் செயலாளர் கீதா ஜீவன் அறிவிப்பு



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் 25.5.2023 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு தூத்துக்குடி கலைஞர் அரங்கில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் ஜி.செல்வராஜ் தலைமை வகிக்கிறார். மாநகர செயலாளர் எஸ்.ஆர். ஆனந்த சேகரன், மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி,ஜி.வி.மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். நான் (மாவட்டச் செயலாளர் அமைச்சர் கீதா ஜீவன்) சிறப்புரையாற்றுகிறேன்.

அது போது முத்தமிழறிஞர், கலைஞர் நூற்றாண்டு விழாமற்றும் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

எனவே மாவட்டக் கழக நிர்வாகிகள்,தலைமைச் செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய,பகுதி,பேரூர்க் கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கீதா ஜீவன்,**
செயலாளர்,
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.





தேனி தெற்கு மாவட்டம்ஆண்டிபட்டி பேரூராட்சி துணை சேர்மன் ஜோதிசேகர் இல்ல திருமண விழாவை ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் நடத்தி வைத்தார்.உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் தி.மு.க. கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தேனி வடக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் அறிவிப்பு



தேனி வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் 27.05.2023 சனிக்கிழமை அன்று மாலை 5 மணியளவில் தேனி வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில், மாவட்ட கழக அவைத் தலைவர் பி.டி.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது.

இச்செயற்குழு கூட்டத்திற்கு, மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடுவது, புதிய உறுப்பினர்கள் சேர்க்கை, கழக ஆக்கப் பணிகள்

**தங்கதமிழ்ச்செல்வன்**
செயலாளர்,
தேனி வடக்கு மாவட்ட தி.மு.க.



சிவகங்கை மாவட்டத்தின், புதிய மாவட்ட ஆட்சித்தலைவராக திருமதி.ஆஷா அஜீத், நேற்று முன்தினம் (22.05.2023 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வார்டு எண் 39 மகாராஜா நகர் பகுதியில் டயோசீசன் கூட்டுறவு பண்டகசாலை ரேஷன் கடைக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 10,லட்சம் ஒதுக்கீடு செய்து கட்டிட பணியை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வகாப் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார். உடன் துணை மேயர் ராஜ், மாமன்ற உறுப்பினர்கள் சுதா பாலன்,பேச்சியம்மாள்,கிட்டு என்ற ராமகிருஷ்ணன். மாவட்ட தகவல் தொழில் பணி துணை அமைப்பாளர் காசிமணி,மகளிர் அணி அனிதா உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.